**In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.**

O.S.No.157/2019 தேதி- 07.02.2026

(P.W.1) - செல்வகுமார்

குறுக்கு விசாரணை

1. நான் எங்கு வசித்து வருகிறேன் என்றால் குலசேகரத்தில் வசித்து வருகிறேன். எனக்கு தமிழ் மற்றும் ஆங்கிலம் எழுத படிக்க தெரியுமா என்றால் தமிழ் மட்டும் தெரியும். வழக்கு ஏ-பட்டிகை சொத்து 9 சென்ட் சொத்தாக சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன 9 சென்ட் சொத்து ஆதியில் யாருக்கு உரிமைப்பட்டது என்றால் என் அப்பாவுக்கு உரிமைப்பட்டதாகும். வழக்கு ஏ-பட்டிகை சொத்தை என் அப்பா ஒரே ஆவணமாக பெறவில்லை என்றால் சரிதான். 3 ஆவணங்களாக விலைக்கு வாங்கியுள்ளார். மேற்சொன்ன 3 ஆவணங்களின் அசல் என் கைவசத்தில் தான் உள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன 3 ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் மேற்சொன்ன 3 அசல் ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் அப்பா முதலில் 5 சென்ட் சொத்தை விலை ஆவணம் மூலம் பெற்றார் என்றால் சரிதான். மேற்சொன்ன 5 சென்ட் சொத்து வழக்கு ஏ-பட்டிகை சொத்தின் எந்த திசையில் உள்ளது என்றால் தெரியாது. என் அப்பா 3 சென்ட் சொத்து விலைக்கு வாங்கிய சொத்து ஏ-பட்டிகை சொத்தின் எந்த பக்கம் என்றால் கிழக்கு பக்கமாகும்.

2. என் அப்பா 1 சென்ட் சொத்து விலைக்கு வாங்கியது ஏ-பட்டிகை சொத்தின் எந்த பக்கம் என்றால் வடக்கு பக்கம் ஆகும். வழக்கு ஏ-பட்டிகை சொத்தின் 4 பக்க எல்கைகள் தெரியுமா என்றால் வடக்கு பக்கம் அம்புஜம் என்பவரின் சொத்துள்ளது, தெற்கு பக்கம் ரோடு உள்ளது, கிழக்கு பக்கம் ஜாண்சன் என்பவரின் சொத்துள்ளது, மேற்கு பக்கம் இவ்வழக்கின் பிரதிவாதி சொத்துள்ளது. வழக்கு பி-பட்டிகை சொத்து என் சொத்திற்கு எந்த பக்கம் உள்ளது என்றால் தெற்கு பக்கம் உள்ளது. வழக்கு பி-பட்டிகை சொத்து யாருக்கு உரிமைப்பட்ட சொத்து என்றால் யாருக்கும் உரிமைப்பட்ட சொத்து இல்லை. வழிப்பாதையாக பயன்படுத்தி வருகிறோம். வழக்கு பி-பட்டிகை சொத்தாக சேர்க்கப்பட்டுளளது பட்டா சொத்து என்றால் சரிதான். வழக்கு பி-பட்டிகை சொத்தின் புல எண்.397/1A1C என்றால் சரிதான். தற்போது என்னிடம்

காண்பிக்கப்படும் பட்டா மேற்சொன்ன புல எண்ணில் காணப்பட்ட பட்டா என்றால் சரிதான். மேற்சொன்ன பட்டாவில் 27 பேர்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு பி-பட்டிகை சொத்து யாருக்கு உரிமைப்பட்டது என்று குறிப்பிட்டு என் சத்திய பிரமான வாக்குமூலத்திலோ, வழக்கின் பிராதிலோ சொல்லவில்லை என்றால் சரிதான்.

3. மேற்சொன்ன பட்டாவில் 27 நபர்களுக்கு பொதுவாக உரிமைப்பட்ட சொத்துதான் பி-பட்டிகை சொத்து என்றால் அதுபற்றி தெரியாது. வழக்கு பட்டிகை சொத்தை அளப்பதற்கு நீதிமன்ற ஆணையர் வழக்கு பட்டிகை சொத்தை பார்வையிட வந்த போது நான் உடன் இருந்தேன் என்றால் சரிதான். பிரதிவாதி வீட்டின் முன் பகுதியில் கான்கீரேட் ரோடு அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது எந்த ஆண்டில் அமைக்கப்பட்டது என்றால் நினைவில்லை. மேற்சொன்ன ரோடு 2019 ல் அமைக்கப்பட்டது என்றால் அதற்கு முன்பே அமைக்கப்பட்டது. மேற்சொன்ன கான்கீரேட் ரோட்டிற்கும் பிரதிவாதியின் சொத்திற்கு இடையில் ஒரு ஓடை அமைந்துள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன ஓடை 2 அடி வீதி, 3 அடி அகலம் கொண்டது என்றால் சரிதான். பி-பட்டிகை சொத்திற்கு ரோட்டில் இருந்து கார் செல்லுமா என்றால் செல்லும். என் முதலில் பிராது தாக்கல் செய்யும் போது வழக்கு பி-பட்டிகை சொத்து அரசுக்கு உரிமைப்பட்ட சொத்து என்று தான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 2025 ஆம் ஆண்டு Amendment Petition தாக்கல் செய்து பி-பட்டிகை சொத்து யாருக்கும் உரிமைப்பட்ட சொத்து இல்லை என்று மாற்றினேன் என்றால் சரிதான். புதிய புல எண்.397/1A1C ல் பிரதிவாதிகளுக்கும் உரிமையுள்ளது என்றால் சரிதான்.

4. வழக்கு ஏ-பட்டிகை சொத்தில் ஒரு கேட் அமைத்துள்ளேன் என்றாலும் அந்த கேட்டின் வழியாக கார் எடுத்து செல்லமுடியாது என்றால் சரிதான். மேற்சொன்ன கேட் எப்போது அமைக்கப்பட்டது என்றால் 20 ஆண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பட்டது. மேற்சொன்ன கேட் 20 ஆண்டுகளுக்கு முன்பு அமைத்தை காண்பிக்க ஆவணம் ஏதும் உள்ளதா என்றால் இல்லை. 4 சக்கர வாகனம் பி-பட்டிகை சொத்தின் வழியாக நான் எடுத்து சென்றேன் என்று அதை காண்பிக்க ஆவணம் உள்ளதா என்றால் ஆவணம் ஏதும் தாக்கல் செய்யவில்லை. கான்கீரேட் ரோட்டிற்கும் பிரதிவாதி சொத்துக்கும் இடையே ஒரு ஓடை செல்கிறது என்றாலும் அதில் கான்கீரேட் அமைத்தாக நான் சொல்லியுள்ள நிலையில் அதற்கு பஞ்சாயத்தில் அனுமதி பெற்றுள்ளேனா என்றால் இரு சக்கர வாகனம் மற்றும் 4 சக்கர வாகனம் எடுத்து செல்ல அமைத்த பாதை என்பதால்

அனுமதி ஏதும் பெறவில்லை. மேற்சொன்ன கான்கீரேட் எந்த ஆண்டு அமைக்கப்பட்டது என்றால் 20 ஆண்டுகள் முன்பு அமைக்கப்பட்டதாகும். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் அமைக்கப்பட்டுள்ள கான்கீரேட் பாதை நான் அமைத்தா என்றால் கான்கீரேட் பாதை காணப்படவில்லை. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் காணப்படும் மின் கம்பம் வழியாக தான் என் வீட்டிற்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5. தற்போது காண்பிக்கப்படும் புகைபடத்தில் காட்டப்பட்டுள்ள கருங்கல் பிரதிவாதிகள் இறக்கி வைத்தது என்றால் சரிதான். அந்த புகைப்படம் பி.வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிரதிவாதியின் வீட்டின் முன் பகுதியில் தான் பிரதிவாதி தயார் வீடு இருந்ததா என்றால் இருந்தது. அந்த பழைய வீட்டை இடித்துவிட்டது தான் தற்போது புதிய வீடு அமைத்துள்ளார்கள் என்றால் சரிதான். அந்த பழைய வீடு இடித்தற்கான மின் இணைப்பு உள்ள சுவர் தற்போதும் அங்கு இருக்கிறது என்றால் சரியல்ல. தற்போது காண்பிக்கப்படும் புகைப்படத்தில் உள்ள இடிக்கப்பட்ட சுவர் தற்போதும் உள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன புகைப்படம் பி.வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் தும்பகோடு கிராமத்தில் சர்வே எண்.400/1A1 5 சென்ட் 8 சதுர லிங்ஸ் சொத்தை 2010 ல் கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். மேற்சொன்ன தும்பகோடு கிராமத்தில் தான் வீடு வைத்து தற்போது வசித்து வருகிறேன் என்றால் சரிதான். தற்போது காண்பிக்கப்படும் புகைப்படத்தில் உள்ள வீடு தான் நான் தற்போது வசித்து வரும் வீடு என்றால் சரிதான். மேற்சொன்ன புகைப்படம் பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு ஏ-பட்டிகை சொத்தின் தெற்கு பக்கம் யார் வீடு உள்ளது என்றால் ஜமாஸ் என்பவரின் வீடுள்ளது. அந்த சொத்தின் சர்வே எண்.397/1A2 என்றால் அது புறம்போக்கு நிலமாகும். நீதிமன்ற ஆணையர் வழக்கு பட்டிகை சொத்தை பார்வையிட்டு அளந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

6. நீதிமன்ற ஆணையர் வரைபடத்தில் வழக்கு பி-பட்டிகை சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள புதிய புல எண்.397/1A2 பாதையாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் அவர்களையும் கட்சியாக சேர்க்க வேண்டும் என்றால் சரியல்ல. ஜமாஸ்க்கு உரிமைப்பட்ட சொத்து இல்லை என்றாலும் அது புறம்போக்கு நிலம் என்பதால் பாதை உரிமை கோரி தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு ஏ-பட்டிகை சொத்தில் அமைக்கப்பட்டுள்ள கேட் 4 1/2 அடி அளவு உள்ளதாக

நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளார் என்றால் 5 1/2 அடி ஆகும். வழக்கு பி-பட்டிகை சொத்தில் வண்டி கொண்டு போனதாக எந்த தடையமும் இல்லை என்றால் சரியல்ல. பி-பட்டிகை சொத்தில் இரு சக்கர வாகனமோ, 4 சக்கர வாகனமோ சென்று வந்ததாக எந்த தடையமும் இல்லை என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் வழக்கு பட்டிகை சொத்தை அளந்து பார்வையிட்டு பி-பட்டிகை சொத்தின் வழியாக வாகனங்கள் எடுத்து செல்ல முடியாது என்றால் பிரதிவாதிகள் கல் இறக்கிவிட்டதால் வாகனங்கள் எடுத்து செல்ல முடியாது. வழக்கு பி-பட்டிகை சொத்தில் கால் தடம் பதித்த 60 செ.மீ வீதி (2 அடி) மட்டுமே ரோட்டில் இருந்து வழக்கு ஏ-பட்டிகை சொத்திற்கு செல்கிறது என்றாலும் வேறு எந்த பாதையும் இல்லை என்று தன்னுடைய அறிக்கையில் 11 வது இடையில் சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல.

7. ரோட்டில் இருந்து பி-பட்டிகை சொத்திற்கு வருவதற்காக 3 அடி வீதி தான் கான்கீரேட் போடப்பட்டுள்ளது என்றாலும் மீதமுள்ளது ஜமாஸ் சொத்தில் தான் ரோடு அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு பி-பட்டிகை சொத்து 1 ஆம் பிரதிவாதிக்கு உரிமைப்பட்ட சொத்து என்றால் சரியல்ல எங்களுக்கு உரிமைப்பட்ட சொத்தாகும். வழக்கு பி-பட்டிகை சொத்து என்னுடைய சொத்து என்று சொல்லியுள்ள நிலையில் அதில் வசதி உரிமை கேட்டு வழக்கு தாக்கல் செய்ய முடியாது என்றால் சரியல்ல. வழக்கில் கேட்கப்பட்டுள்ள வசதி உரிமை கோரியுள்ள சொத்து யாருக்கு உரிமைப்பட்டது என்பதையும் எந்த ஆண்டு, தேதியில் வசதி உரிமையாக அந்த சொத்தின் உரிமையாளடைய அறிவுடன் பயன்படுத்தி வந்ததை பிராதில் குறிப்பிட்டு கேட்டு அதை சாட்சிகள் மூலம் நிரூபித்தால் மட்டும் கோர முடியும் என்றால் சரியல்ல. 50 ஆண்டுகாளாக வழக்கு பி-பட்டிகை சொத்தை பயன்படுத்தி வருவதாக சொல்லியுள்ள நிலையில் அதை நிரூபிக்க எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

8. இவ்வழக்கில் ஏ-பட்டிகை சொத்தில் 4 1/2 அடி கேட் அமைத்துவிட்டு 8 அடி வீதி, 35 அடி நீளத்தில் வசதி உரிமை கோருவது நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு பி-பட்டிகை சொத்தானது 1 ஆம் பிரதிவாதியின் பாட்டிக்கு உரிமைப்பட்ட சொத்தில் அந்த காலத்தில் அனுமதி உடன் நடந்து செல்ல 3 அடி விடப்பட்ட பகுதி என்றாலும் நான் வசதி உரிமை கோர முடியாது என்றால் சரியல்ல. இவ்வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 ஆவணத்தில் அடிப்படையில் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்த போது புறம்போக்கு நிலத்தில் கருங்கற்களை இறக்குவதாக வழக்கு தாக்கல்

செய்யப்பட்டு தற்போது பி-பட்டிகை சொத்து யாருக்கும் உரிமைப்பட்ட சொத்து இல்லை என்று மாற்றி கூறியுள்ளதால் இந்த வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு ஏ-பட்டிகை சொத்தில் யாரும் வசிக்கவில்லை என்றாலும் பிரதிவாதிகளை கஷ்டபடுத்த வேண்டும் என்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் இந்த வழக்கு பிரதிவாதிக்கு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. என் அம்மா ஏ-பட்டிகை சொத்தில் தான் வசித்து வருகிறார்.